# தேசத்தில் வாழுதல்



பாடம் 11 டிசம்பர் 13, 2025













“மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.” (நீதிமொழிகள் 15:1)

பல வருட போருக்கு பிறகு, இஸ்ரவேல் கானானை கைப்பற்றியது, இருப்பினும் அதன் அனைத்து மக்களும் இன்னும் வெளியேற்றப்படவில்லை.

கிழக்கு பகுதியை (ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம்), வெற்றிக்கு உதவ யோர்தானைக் கடந்து சென்ற இரண்டரை கோத்திரத்தினர் தங்கள் வாக்குறுதியை உண்மையாக நிறைவேற்றினர்.

இறுதியாக, பிரிவதற்கான நேரம் வந்துவிட்டது. அவர்களை ஆசீர்வதித்து, கர்த்தருடைய பாதையில் தொடர அறிவுறுத்திய பிறகு, யோசுவா அவர்களை அனுப்பிவிட்டார். ஆனால், இஸ்ரவேல் மக்களின் ஒற்றுமையை எளிதில் அழிக்கக்கூடிய ஒரு கடுமையான தவறான புரிதலால் இந்த விடைபெறுதல் மறைக்கப்பட்டது.





- பிரியாவிடை உரை (யோசுவா 22:1-8)
- முரண்பாட்டிற்கான காரணம் (யோசுவா 22:10-12)
- குற்றச்சாட்டுகள் (யோசுவா 22:13-20)
- கனிவான பதில் (யோசுவா 22:21-29)
- ஒப்புரவாகுதல் (யோசுவா 22:30-34)

# பிரியாவிடை உரை

"ஆனாலும் நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவருடைய வழிகளெல்லாம் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவரை உங்கள் முழுஇருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடு சேவிக்கிறதற்காக, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும் நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யும்படிமாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள் என்றார்."(யோசுவா 22:5)

யோர்தான் நதி கோத்திரங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்ப்படுத்தப் போவதால், இரண்டரை கோத்திரங்கள் உண்மையாக இருக்கும்படி யோசுவா ஞானமான ஆலோசனையை வழங்கினார் (யோசுவா 22:5):

| | |
|---|---|
| உங்கள் தேவனாகிய கர்த்தரை நேசிக்க | அன்புதான் நம்மை தேவனிடம் அழைத்து செல்ல வேண்டிய கொள்கை. அவர் முதலில் நம்மை நேசித்ததால் நாம் அவரை நேசிக்கிறோம். (1 யோவான் 4:19) |
| அவருக்கு கீழ்படிந்து நடக்க | தேவனோடு நடக்க தேர்ந்தெடுப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தையை யோசுவா இவ்வாறு சுட்டிக்காட்டுகிறார் |
| அவருடைய கட்டளைகளை கடைபிடிக்க | தேவன் செய்ததை புரிந்துகொள்ளும் நன்றியுள்ள இதயத்தின் இயல்பான விளைவுதான் கீழ்படிதல் |
| அவரை இறுகப் பற்றிக்கொள்ள | அந்த பிணைப்பை எந்த கவனசிதறலும் உடைக்கவிடாமல் நாம் தேவனை பற்றிக்கொள்ள வேண்டும் |
| உங்கள் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அவருக்கு சேவை செய்ய | நாம் நம் படைப்பாளருக்கு அன்புடன் மனமுவந்து சேவை செய்யும்போது, நமது உண்மையான நோக்கம், திருப்தி மற்றும் ஏராளமான வாழ்க்கையை காண்கிறோம் |



# முரண்பாட்டிற்கான காரணம்

"கானான்தேசத்தில் இருக்கிற யோர்தானின் எல்லைகளுக்கு வந்தபோது, ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரும், அங்கே யோர்தானின் ஓரத்திலே பார்வைக்குப் பெரிதான ஒரு பீடத்தைக் கட்டினார்கள்." (யோசுவா 22:10)



யோர்தான் நதியை அற்புதமாக கடந்ததற்கான நினைவுசின்னத்தை யோசுவா அமைத்த இடத்திற்கு அருகில், இரண்டரை கோத்திரத்திற்கு பரிசுத்த ஸ்தலத்தின் பலிபீடத்தை போன்ற ஒரு பலிபீடத்தை கட்டினார்கள் (யோசு. 22:10, 28).



இந்த செயல், ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள தகன பலிபீடத்தை தவிர வேறு இடத்தில் பலிகளை செலுத்துவதை தடைசெய்யும் சட்டத்தின் மீறலாக விளக்கப்பட்டது (லேவி. 17:8-9).



மீதமுள்ள இஸ்ரவேலர்கள் தங்கள் சகோதரர்களை தாக்குவதன் மூலம் இந்த பாவத்தை ஒழிக்க முடிவு செய்தனர்(யோசு. 22:12). ஆனால் தேவன் தலையிட்டு ஒரு இரத்தம் சிந்தக்கூடிய உள்நாட்டு போரை தடுத்தார். எல்லா ஆதாரங்களும் இல்லாமல் தீர்ப்பளிக்க விரும்பாத மக்களை அவர் எழுப்பினார்; அவர்கள் சந்தேகத்தின் பலனை அளித்தனர்; மேலும் தங்கள் சகோதரர்கள் தங்களை விளக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பளிக்க முடிவு செய்தனர் (யோசு. 22:13-14).

அதன் விளைவாக, அவர்கள் செய்த ஒரே தவறு தனது சகோதரர்களுக்கு தனது நோக்கங்களை தெரிவிக்காமல் போனது தான்... ஆனால் அது பாவமல்ல.

# குற்றச்சாட்டுகள்

"நீங்கள் இந்நாளிலே கர்த்தரைப் பின்பற்றாதபடிக்குப் புரண்டு, இந்நாளிலே கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணும்படியாக உங்களுக்கு ஒரு பீடத்தைக் கட்டி, இஸ்ரவேலின் தேவனுக்கு விரோதமாகப் பண்ணின இந்தத் துரோகம் என்ன?"
(யோசுவா 22:16)



விசாரணைக்குழுவின் தலைவராக பினெகாஸ் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார் (யோசு. 22:13-14)?

பிரதான ஆசாரியரின் மகனான பினெகாஸ், பாகால் பேயோரில் நடந்த பாவத்தைத் தடுப்பதில் விடாமுயற்சியுடன் இருந்தார் (எண். 25:7-8). அவர் தனது உரையில், இந்த பாவத்தை ஆகானின் பாவத்துடன் இணைத்து, இரண்டரை கோத்திரத்தினர் செய்ததாக கூறப்படும் பாவத்துடன் அதை சமன் செய்தார் (யோசு. 22:16-20).



பினெகாஸ் பேச்சு சரியான அர்த்தமுள்ளதாக இருந்தது. புதிதாக எழுப்பப்பட்ட பலிபீடத்தின் பலிகள் செலுத்தப்பட்டால், அதற்காக தேவன் இஸ்ரவேல் முழுவதையும் தண்டிப்பார் (யோசு. 22:18பி).

இருப்பினும், அவர்கள் பாவம் செய்வதற்கு முன்பு, இந்த தவறை சரிசெய்ய அவர் அவர்களுக்கு வாய்ப்பளித்தார்: பரிசுத்த ஸ்தலம் இருந்த யோர்தான் பக்கம் திரும்புவதற்கான வாய்ப்பை அவர் அவர்களுக்கு வழங்கினார்(யோசு. 22:19).



# கனிவான பதில்

"ஒரு காரியத்தைக்குறித்து நாங்கள் எங்களுக்கு அந்தப் பீடத்தைக் கட்டினதே அல்லாமல், கர்த்தரைப் பின்பற்றாதபடிக்கு விலகுவதற்காவது, அதின்மேல் சர்வாங்க தகனபலியையாகிலும் போஜனபலியையாகிலும் சமாதானபலிகளையாகிலும் செலுத்துகிறதற்காவது அதைச் செய்ததுண்டானால், கர்த்தர் அதை விசாரிப்பாராக." (யோசுவா 22:23)

குற்றம் சாட்டப்பட்டபோது, ரூபன் மற்றும் காத் கோத்திரத்தாரும், மனாசேயின் பாதி கோத்திரத்தாரும் முன்மாதிரியாக நடந்துகொண்டனர்:



- அவர்கள் குற்றச்சாட்டுகளை அமைதியாக கேட்டனர்
- அவர்கள் தேவனை சாட்சியாக அழைத்தார்கள்
- அவர்கள் பாவம் செய்திருந்தால் தண்டிக்கப்படுவதை ஏற்றுக்கொண்டனர்
- அவர்கள் தங்கள் உண்மையான உந்துதல்களை வெளிப்படுத்தினர்

பலிபீடத்தை கட்டுவதற்கு தங்கள் சகோதரர்களின் நோக்கங்களை இஸ்ரவேலர் அறியாதபோது, அவர்கள் கருதியது: கலகம், பிரிவினைக்கான ஆசை, தெய்வீக தண்டனை.

யதார்த்தம் என்னவென்றால்: தங்கள் சகோதரர்களுடன் ஒற்றுமையாக இருக்கவும் இஸ்ரவேலர்களின் தரப்பில் எதிர்காலத்தில் பிரிவினை ஏற்படுவதை தவிர்க்கவும் ஒரு ஆசை(யோசு. 22:24-26).

குற்றம்சாட்டப்பட்ட கோத்திரத்தார் குற்றச்சாட்டுகளால் புண்படுத்தப்பட்டு, தங்களை பாதுகாத்துக்கொள்ள வன்முறையில் ஈடுப்பட்டிருக்கலாம் என்றாலும், அவர்களின் நட்பு ரீதியான பதிலுக்கு நன்றி, போர் தவிர்க்கப்பட்டது.



# ஒப்புரவாகுதல்

"அந்தச் செய்தி இஸ்ரவேல் புத்திரரின் பார்வைக்கு நன்றாயிருந்தது; ஆகையால் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் குடியிருக்கிற தேசத்தை அழித்துவிட, அவர்கள்மேல் யுத்தத்திற்குப் புறப்படுவோம் என்கிற பேச்சை விட்டு, இஸ்ரவேல் புத்திரர் தேவனை ஸ்தோத்திரித்தார்கள்."
(யோசுவா 22:33)



குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதைக் கண்டதும், பினெகாஸூம் இஸ்ரவேல் பிரதிநிதிகளும் நிம்மதியடைந்தனர் (யோசு. 22:30-31). இஸ்ரவேலர் உண்மையை கற்றுக்கொண்ட போது, அவர்கள் தங்கள் பங்கிற்கு மகிழ்யடைந்து தேவனை புகழ்ந்தார்கள் (யோசு. 22:32-33).



குடும்பம், தேவாலயம் மற்றும் சமூகம் தொடர்பான ஒத்த சூழ்நிலைகளில் அமைதியை மீட்டெடுப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை அவர்களின் உதாரணத்தின் மூலம் நாம் காணலாம்:

- நமது எண்ணங்களை தொடர்புகொள்வது
- அவசரப்பட்டு முடிவுகளை எடுக்காதீர்கள்
- செயல்படுவதற்கு முன் பிரச்சனைகளைப் பற்றி பேசுங்கள்
- ஒற்றுமையை அடைய தியாகங்களை செய்ய தயாராக இருங்கள்
- குற்றச்சாட்டுகளுக்கு கண்ணியமான பதிலை கொடுங்கள்
- அமைதி மீட்டெடுக்கப்படும்போது மகிழ்ச்சியடைந்து தேவனை ஸ்தோத்தரியுங்கள்